செ.வெ.எண்:01 / ~~மார்ச்~~ ஏப்ரல் /2019 நாள்:01.04.2019

**பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2019 – திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்களுக்குத் தேர்தல் செலவு கணக்குகளைத் தாக்கல் செய்வது தொடர்பாக தேர்தல் செலவின பார்வையாளர்கள் (Election Expenditure Observers) திரு. அனூப் குமார் வெர்மா, I.R.S., திரு. சுதன்சு S. கௌதம், I.R.S., ஆகியோர் தலைமையில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.**

------------------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2019, திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்களுக்குத் தேர்தல் செலவு கணக்குகளைத் தாக்கல் செய்வது தொடர்பாக தேர்தல் செலவின பார்வையாளர்கள் (Election Expenditure Observers) திரு.அனூப் குமார் வெர்மா, I.R.S., திரு.சுதன்சு S. கௌதம், I.R.S., ஆகியோர் தலைமையில் பயிற்சி வகுப்பு இன்று(01.04.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேர்தல் செலவின பார்வையாளர்கள் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்களுக்கு தேர்தல் செலவு கணக்குகளைத் தாக்கல் செய்வது குறித்து அறிவுரை மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டது.

வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் செலவுக்கென துவங்கப்பட்ட தனி வங்கி கணக்கில் தங்கள் சொந்த பணம், அரசியல் கட்சிகள் மற்றும் ஆதரவாளர்கள் வாயிலாகப் பெறப்படும் தொகைகளை வைப்பீடு செய்து, அதிலிருந்து எடுத்து தேர்தல் செலவினங்களை மேற்கொள்ள வேண்டும். தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களையும், அதற்கென வழங்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் செலவு கணக்கிற்கான பதிவேட்டில் எழுத வேண்டும். தேர்தல் செலவின கணக்குகளை முறையாக வேட்பாளர்கள் தினமும் செலவு கணக்குகளை பதிவேட்டில் எழுதி வேண்டும். அன்றாட செலவு வேட்பாளர்கள் வருகின்ற 04.04.2019, 10.04.2019 மற்றும் 16.04.2019 ஆகிய 3 தேதிகளில் தேர்தல் செலவின பார்வையாளர்கள் முன்பாக கணக்குக் குழுவினர் மற்றும் உதவி தேர்தல் பார்வையாளர்கள் மூலமாக தணிக்கைக்கு ஆஜர்படுத்த வேண்டும்.

தேர்தல் செலவின பார்வையாளர்கள் நேர்மையான மற்றும் சுதந்திரமான முறையில் தேர்தல் நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் இவ்வாறு தேர்தல் செலவின பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரால் (கணக்குகள்) திரு.பாபு, மண்டல அலுவலர் திருமதி.தமிழ்கனி மற்றும் 5 வேட்பாளர்கள் மற்றும் 20 வேட்பாளர்களின் முகவர்கள், உதவி செலவு பார்வையாளர்கள், கணக்குக் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:**

ஒப. 1/4/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**